[*1994 ஏப்ரல் 26*

2. வினா கேட்க அழைத்தபோது இருக்கையில் இல்லாத உறுப்பினர் வினா நேரம் முடிந்த பிறகு அதுகுறித்து எழுப்புதல்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கூப்பிடும்போது நீங்கள் இருக்கையில் இல்லை. அதற்குமேல் அந்தக் கேள்வி முக்கியமானது என்றால் நீங்கள் எழுதிக் கொடுங்கள். முன் அனுமதி பெற்று வந்திருந்தால் அந்தமாதிரித் திரும்ப எடுக்கலாம். அந்தமாதிரி இல்லை. (குறுக்கீடு) இல்லை, இப்போது முடியாது. நீங்கள் எழுதிக் கொடுங்கள். திரும்ப நாளைக்கு, நாளை மறுநாள் லிஸ்டில் போட்டுக் கொண்டு வரலாம். (குறுக்கீடு) இல்லை. இப்போது முக்கியமான பிரச்சினை, எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளி வைக்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை--பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இந்தச் சட்டமன்ற கூட்டத் தொடர் முழுவதும் சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்துக்கொள்ளக் கூடாது என்ற மிகப் பெரும் தண்டனையை நீங்கள் அவருக்கு வழங்கி இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அளித்த தண்டனையைப்பற்றி நீங்கள் உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது. அந்த உறுப்பினரைப் போலவே நீங்களும் நடந்துகொள்கிறீர்கள். அந்த உறுப்பினர் பற்றி நானே இங்கு சொல்லிவிடுகிறேன். நீங்கள் எழுப்பிவிட்டீர்கள் அல்லவா? (குறுக்கீடு) நீங்கள் மிகப் பெரிய தண்டனை என்கிறீர்கள். (குறுக்கீடு) விதி முறைப்படி நான் கொடுத்திருக்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: ஒரு தீர்ப்பினை நீங்கள் வழங்கி இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

திரு. பி.வி. இராஜேந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். நீங்கள் ஒன்றும் கொடுக்கவில்லை. விதி 120--ஐப் படித்துப் பாருங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: கலந்துகொள்ளக் கூடாது என்ற ஒரு தீர்ப்பினை நீங்கள் வழங்கி இருக்கின்றீர்கள். கடந்த திங்கள் அன்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பேரவையிலே சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தொடர்ந்து இந்த சட்டமன்றத்திற்கு வந்து, ஜனநாயக கடமைகளை ஆற்றுவதற்கு உங்களுடைய தீர்ப்பினை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்கள். அதைப்போன்று நானும், கட்சியினுடைய கொறடா சுந்தரராஸ் அவர்களும் ரங்கநாதன் அவர்களும், சுதர்சனம் போன்றவர்கள் உங்களை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை நாங்களும் வலியுறுத்தினோம். மேலும், உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் முதலமைச்சர் அவர்களை ஒருமையிலே நான் பேசவில்லை என்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது நீங்கள் கோரிக்கை வைக்கிறீர்கள். வேறு அதிகமாகப் பேசுவதற்கு அனுமதி இல்லை. அவர் நடந்துகொண்டது முறைகேடானது, இங்கே பேசியது மிகத் தவறானது என்பதை இரண்டு, மூன்று நேரங்களில் நான் சொல்லிவிட்டேன். நீங்கள் திரும்ப அவர் செயலை நியாயப்படுத்துகிறீர்கள். அவர் மிக முறைகேடாக நடந்துகொண்ட ஓர் உறுப்பினர். அவருக்கு இவ்வளவு வக்காலத்து வாங்கிக் கொண்டு இருப்பதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) இல்லை. மிக முறைகேடாக நடந்துகொண்டு, பல நேரங்களில் இந்தப் பேரவையின் அலுவல்களைக் கெடுக்க வேண்டுமென்று இருக்கிற 5,6, உறுப்பினர்களில் அவரும் ஒருவர். எனவே, அப்பேர்ப்பட்ட மிக மோசமான, விதிமுறைகளுக்கு மாறாக நடக்கிற உறுப்பினருக்கு நீங்கள் வக்காலத்து வாங்குவதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அவருக்குக் கொடுத்த தண்டனை அப்படியே இருக்கும். எனவே, மற்ற உறுப்பினர்கள் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றுவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அந்த உறுப்பினரைப் பற்றி இதற்கும் அதிகமாக நீங்கள் பேச வேண்டாம். அதை மறுபரிசீலனை செய்ய இயலாது. அந்த அளவுக்கு முறைகேடாக நடந்துகொண்டார். அதற்குப் பிறகு வெளியிலே போயும் அவர், தான் செய்தது சரி என்றும், பேரவைத் தலைவர்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செய்தது மிகப் பெரிய தவறு என்றும் வெளியிலே பேசிக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருக்கிறார். அதை எல்லாம் சாதரணமாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதை அவை உரிமை மீறல் பிரச்சினையாகவேகூட எடுக்க வேண்டிய அளவிற்குத் தொடர்ந்து அவர் தவறு செய்துகொண்டிருக்கிற காரணத்தால் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற உங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் அமரலாம்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்கிறேன். இந்தப் பேரவைத் தலைவர் சொல்வதுதான் இந்தப் பேரவையிலே இருக்கும். பேரவைத் தலைவரை விட இராஜேந்திரன், பீட்டர் அல்போன்ஸ் பெரிய ஆள் கிடையாது. உட்காருங்கள். இதிலே ஒன்றும் அனுமதிக்க முடியாது.

திரு. பி.வி. இராஜேந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இராஜேந்திரனும், பீட்டர் அல்போன்சும் மிக வரம்பு மீறி நடக்கிற உறுப்பினர்கள். உங்களை அனுமதிக்க முடியாது. அந்த அளவுக்கு (குறுக்கீடுகள்) மிக வரம்பு மீறி நடக்கிற உறுப்பினர்கள். ஏதோ உங்கள் மீது இன்னும் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிற காரணத்தால் இங்கே நின்று கொண்டு பேரவைத் தலைவருக்கு எதிராகப் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். அனுமதிக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வேறு எங்கேயோ போய், எது எதையோ சொல்லிக் கொண்டிருக்கிறார், சொல்லி கொண்டு இருக்கட்டும். சில "Yellow Journal"-ல் எல்லாம் அவர் எழுதிக் கொண்டிருக்கிறார். எழுதிக்கொண்டு இருக்கட்டும். அதைப் பற்றிக் கவலையில்லை. (குறுக்கீடுகள்). அதைப்பற்றி எல்லாம் கவலை இல்லை. முடியுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அவர் சொல்லியது எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-20

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 நாட்களாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தீர்ப்புக் கொடுத்து விட்டேன். அதற்கு மேலே பேச அனுமதியில்லை. (குறுக்கீடு) மறுபரிசீலனை செய்ய இயலாது. அவர் அவ்வளவு மோசமான உறுப்பினர், எனவே மறுபரிசீலனை செய்ய இயலாது.

திரு. பி.வி. இராஜேந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு நீங்கள் யார்? இங்கே அவையில் நடைபெறுவதைக் கட்டுப்படுத்துவதற்கு எனக்குப் பேரவை விதி 120 இருக்கிறது. அதன் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறேன். நான் நடவடிக்கை எடுத்ததைக் கேட்பதற்கு இராஜேந்திரனுக்கு எந்த உரிமையும் இல்லை. பேரவைத் தலைவருடைய உத்தரவை மீறிப் பேசுகிற உரிமை இராஜேந்திரனுக்கு இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதுவும் கொடுக்காமல் பேசிக் கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது.

திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆஃப் ஆர்டர், பேரவைத் துணைத் தலைவர்.

***திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):** இந்த அவையிலே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஓர் உறுப்பினர் தவறாக நடந்துகொண்ட விதம் குறித்து தாங்கள் ஏற்கெனவே ஒரு தீர்ப்புச் சொல்லி இருக்கிறீர்கள். அந்தத் தீர்ப்பைச் சொன்ன பிறகு, 2,3 நாட்களுக்கு முன்பாகக் கூட இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். அப்போது, மற்ற உறுப்பினர்கள் இந்த அவைக்கு வந்து பேசுவதற்கும், விவாதத்திலே கலந்துகொள்வதற்கும் எந்த அனுமதி மறுப்பும் இல்லை, அவர்கள் வரலாம் என்று தாங்கள் கூறியும்கூட, தொடர்ந்து இந்தப் பிரச்சினையைத் தினந்தோறும் எழுப்பி, மறுபரிசீலனை என்ற பெயரில் ஏதாவது ஒரு பிரச்சினையை உருவாக்க வேண்டுமென்று திட்டமிட்டு ஏதாவது பிரச்சினை செய்து கொண்டிருக்கிறார்கள். மீண்டும், மீண்டும்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தாங்கள் தெளிவாகத் தங்கள் தீர்ப்பைச் சொன்ன பிறகு, மீண்டும் மீண்டும் திரு. இராஜேந்திரன் எழுந்து, அந்தத் தீர்ப்பை மீறி, அந்தத் தீர்ப்பை விவாதிக்கின்ற வகையிலே, உங்கள் உரிமையை அவர் தன் கையிலே, எடுத்துக் கொண்டு பேசிய பேச்சுக்கள் அவைக் குறிப்பில், இருக்கலாமா? தாங்கள் தெளிவான தீர்ப்பைச் சொன்ன பிறகும், இதில் மீண்டும் பரிசீலனை செய்யச் சொல்ல முடியுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அனுமதி பெறாமல் பேசியது அவைக் குறிப்பில் இருக்காது. ஓர் உறுப்பினர் நீங்கள் சொல்லுகிற அந்த உறுப்பினர் பலமுறை இந்த அவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்திலேயே பேசிக் கொண்டு இருக்கிறவர், அத்தகைய நடவடிக்கைகளிலே ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறவர். அதைப்போல இப்போது செய்த நடவடிக்கைக்காக நான் நடவடிக்கை எடுத்து, வெளியேற்றி இருக்கிறேன். மேலும் அவையிலே முறைகேடாக நடந்துகொண்ட ஓர் உறுப்பினர், வெளியிலே போய் தான் செய்தது தவறு என்று கருதுவதுபோல் இல்லாத சூழ்நிலையில் அது பற்றி மறுபரிசீலனை செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) மேற்கொண்டு இதிலே வேண்டாம். (மேசையை தட்டும் ஒலி) (குறுக்கீடு) மேற்கொண்டு இதிலே வேண்டாம். (குறுக்கீடு) பிரதான எதிர்க்கட்சியாக நீங்கள் இருக்கலாம். நேற்று இருந்தீர்கள், இன்றைக்கு இருக்கிறீர்கள். இங்கே இருந்து நீங்கள் பணியாற்றுங்கள். நீங்கள் பணியாற்ற வேண்டுமென்றுதான் நான் பலமுறை கேட்டிருக்கிறேன். (குறுக்கீடு) சுமுகமாக ஒத்துழைப்பது என்கிறபோது முறைகேடாக நடந்துகொண்ட உறுப்பினருக்கு வக்காலத்து வாங்குவது முறையல்ல. இதிலேயே நீங்கள் முறையாக நடந்துகொள்ளவில்லை. (குறுக்கீடு) இப்போதே பார்க்கிறோம், எப்படி சுமுகமாக நீங்கள் நடக்கிறீர்கள் என்று. எனவே இது வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடு) மறுபரிசீலனை செய்ய இயலாது என்று சொல்லிவிட்டேன், உட்காருங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மறுபரிசீலனை செய்யாததைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறேன் என்று சொல்லுவதுகூட அவையினுடைய

அனைத்து விதிகளுக்கும் முரணானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

4. தகவல் கோரல்

பேரவைத் தலைவரிடம் எழுத்துமூலம் கொடுக்காது ஒரு பிரச்சினையை எழுப்புதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தம்புசாமி, நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. 9-48க்கு வந்து ஒரு பிரச்சினையைப் பற்றி என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள். எழுத்து மூலமாகக் கொடுங்கள், நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் வாய்மொழி மூலமாக என்னிடத்திலே 9.48க்கு வந்து சொன்னீர்கள். நாளை எடுத்துக்கொள்கிறேன். எழுத்து மூலமாக நீங்கள் கொடுத்தால் நாளை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) எழுத்து மூலமாகக் கொடுக்காததை எப்படி எடுப்பது? மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எழுப்ப வேண்டுமென்று கேட்டபோது, அதை எழுத்து மூலமாகக் கொடுங்கள், நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று தாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். அப்படிச் சொன்ன பிறகும் நாங்கள் எழுப்புகிறோமென்று சொன்னால், எழுப்பினது நிற்கும், அதற்குப் பதில் இருக்காது. பதில் வேண்டுமென்றால் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். உறுப்பினர் அவர்கள் முறைப்படி நடந்து கொள்ள வேண்டும்.

திரு. வே. தம்புசாமி: அவைக்குத் தகவல் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த மாதிரித் தகவல் சொல்வதற்கு விதிகளில் வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மாதிரி நடந்து கொள்ள வேண்டாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தகவல் எனக்கு எழுத்து மூலமாகக் கொடுத்து, அதை நான் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். 9-48-க்கு வந்து என்னிடத்தில் சொன்னீர்கள். நான் உடனே, எழுத்து மூலமாகக் கொடுங்கள், நாளை எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அந்தமாதிரி எடுக்க முடியாது. "ஜீரோ" அவர் என்பதில், அந்தமாதிரி எந்த விதிமுறைகளுக்கும்